**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.118/2021**

**Prosecution Witnesses : 8**

| | | | |
|---|---|---|---|
| Name | : **கௌரி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **செல்லபாண்டியன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(04.08.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாவட்டம் சிந்துபட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் திரு.ராஜபாண்டி என்பவரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம். அவர்கள் மாற்று பணியில் சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். கடந்த 04.03.2021ம் தேதி 13.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.ராஜபாண்டி அவர்கள் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும் போது ஓம்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் அடிப்படையில் அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 41/2021 பிரிவுகள் 379 இதச உ/இ 511 இதசவின் படி வழக்கு பதிவு செய்து புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மற்ற நகல்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கை அவரது

புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினம் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் காசிமாயன் மற்றும் ராஜ்குமார் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.8, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆகும்.** மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் 04.03.2021ம் தேதி 16.40 மணிக்கு கார்கோடன் மற்றும் சின்னபாண்டி முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று சொத்து கைப்பற்றப்பட்டது. சொத்து சுமார் 48 செ.மீ நீளமுள்ள Sவடிவிலான 8MM இரும்பு கம்பி ஒன்று கைப்பற்றபட்டது. எதிரி தக்க நீதிமன்ற பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அத்தாட்சியில் உள்ள விபரங்கள் எங்களது காவல் நிலையத்தின் உள்ளே சார்புஆய்வாளர் ராஜபாண்டி என்பவர் கொடுத்தது தான். **அந்த அத்தாட்சி அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **படிவம் 91 அ.சா.ஆ.11 ஆக குறியிடு செய்யப்படுகிறது**. இரும்பு கம்பி உள்ள புகைப்படத்துடன் கூடிய சி.டி **சா.பொ.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு 06.03.2021ம் தேதி சார்பு ஆய்வாளர் தனது விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 379 உ/இ 511 இதசவின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் கு.வி:**

வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளித்துள்ளதால் எனக்கு விசாரணை பற்றி தெரியாது என்றும் பொய்யான தகவல்களை தயார் செய்து எதிரியின் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.